DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 65/2020**

**Deposition of LW6 examined as PW8** Dt. 21.07.2025

| | |
|---|---|
| Name | மனோகரன் |
| Father's/Husband's Name | முத்தையன் |
| Village | அல்லிவிளாகம் |
| Taluk | |
| Age | 47/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 21.07.2025

(A2 present. A1 called absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மதியம் 12.30 மணியளவில் நான் டீ வாங்கி கொண்டு வயலுக்கு சென்ற போது எதிரி இளஞ்செழியன் வீட்டிற்கு எதிரில் போலீசார் என்னிடம் இளஞ்செழியனுக்கும், முத்துவிற்கும் சண்டை சம்பந்தமாக தெரியுமா என்று கேட்டு விசாரித்தார்கள். நான் அவர்களை தெரியும், அவர்களுக்கிடையேயான சண்டை தொடர்பாக தெரியாது என்று கூறினேன். என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்கண்ட கையொப்பத்தினை இளஞ்செழியனின் வாசலில் வைத்து செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னிடம் போலீசார் கையொப்பம் பெற்ற தாளில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பார்வை மகசரில் மற்றொரு கையொப்பம் செய்தது யார் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

21.7.25

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை